இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 11.03.2026

# திசையைத் தீர்மானித்த திருச்சி !

‘மு.க.ஸ்டாலின் அவர்களே முதலமைச்சராகத் தொடரட்டும்’ என்று தமிழ்நாடே சொல்வதைப் போல இருந்தது திருச்சி மாநாடு!

சிறுகனூரைப் பெருகனூர் ஆக்கிக் காட்டி விட்டார்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உடன்பிறப்புகள். திராவிட முன்னேற்றக் கழகத்தை பேரமைப்பாகக் காட்டி, தமிழ்நாடு செல்லும் திசையைத் தீர்மானித்து விட்டார் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**கழக வரலாற்றில் திருச்சிக்கு மிகப்பெரிய இடம் உண்டு. நாம் தேர்தலில் போட்டியிடலாமா, வேண்டாமா என்று வாக்கெடுப்பு நடத்திய 1956 மாநில மாநாடு நடந்ததும் திருச்சிதான். ‘தி.மு.கழகத்தின் தீரர்கள் கோட்டம் திருச்சி’ என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். ‘திருச்சி என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாடி வீடு’ என்று கலைஞர் அவர்கள் சொல்லுவார்கள். திருச்சி என்பது திராவிடமுன்னேற்ற கழகத்தின் கோட்டை என்று அனைவரும் சொல்வார்கள்.**

இதுதான் முதன்மைக் கோட்டை என்று சொல்லத்தக்க வகையில் நடந்தது இம்மாநாடு.

**“எல்லாச் சாலைகளும், திருச்சியை நோக்கி! எல்லாத் திசைகளும், திருச்சியை நோக்கி! எல்லா மக்களும், திருச்சியை நோக்கி! திரும்பும் திசை எல்லாம், கருப்பு சிவப்பு! திரும்பும் திசை எல்லாம், அண்ணாவின் தம்பிகள்! திரும்பும் திசை எல்லாம், கலைஞரின் உடன்பிறப்புகள்!”** என்று கழகத் தலைவரை உச்சி குளிர வைத்துவிட்டது திருச்சி மாநாடு.

எவராலும் வீழ்த்த முடியாத திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெரும் சேனையை திருச்சியில் கூட்டிக் காட்டி விட்டார் கழகத் தலைவர்.

**“உங்களால்தான் நான் வளர்ந்தேன்! உங்களால்தான் நான்உயர்ந்தேன்! உங்களுக்காகத்தான் நான் வாழ்கிறேன்!”** என்று கழகத் தலைவர் சொன்ன போது எழுந்த கைதட்டல், பாசத்தின் வெளிப்பாடாக அமைந்திருந்தது.

“வெட்டி வா என்றால் கட்டி வரும் தம்பி கே.என்.நேரு” என்று தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர் முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு. அவரைக் கழகத் தலைவர் அவர்கள் பல்வேறு விதங்களில் விதவிதமாய் பாராட்டி இருக்கிறார். அதில் மிக முக்கியமானது, **‘மாநாடு என்றால் நேரு; நேரு என்றால் மாநாடு’** என்பது ஆகும். அதனை மீண்டும் திருச்சியில் மெய்ப்பித்துள்ளார் மாண்புமிகு அமைச்சர் கே.என்.நேரு.

கம்பீரமான மேடை, லட்சக்கணக்கான தொண்டர்கள் எங்கிருந்து பார்த்தாலும் தெரியும் வகையில் உயரமான மேடை, சீரான இருக்கைகள் என ராணுவ மிடுக்கோடு அமைக்கப்பட்டு இருந்தது மைதானம். 100 அடி உயரக் கம்பத்தில் ராஜ நடைபோட்டு நடந்து வந்து கொடியேற்றிய தலைவர் அவர்கள், லட்சக்கணக்கான தொண்டர்களுக்குள் நீந்தி வந்து வாஞ்சைமிகு வணக்கங்களையும் வாழ்த்துகளையும் பெற்றுக் கொண்ட காட்சியே கண்கொள்ளாக் காட்சி ஆகும். மக்கள்திரள்வதை விட முக்கியமானது திரண்ட மக்களைக் கட்டுக்கோப்புடன் கவனிப்பது ஆகும். ஒழுங்கும் சீருமான மாநாடாகவே திருச்சி மாநாட்டை நடத்திக் காட்டிவிட்டார் மாண்புமிகு கே.என்.நேரு.

பலப்பல மாநாடுகள் நடந்த இடம் திருச்சி. ஆனால் அனைத்திலும் பளபளக்கும் மாநாடாக அமைந்திருந்தது இந்த மாநாடு. இதில் தலைவர் ஆற்றிய உரை எழுச்சி உரை, உணர்ச்சி உரை, அன்பு உரை, உண்மை உரை என எல்லாம் கலந்த உரையாக அமைந்தது.

**★ ஏழாவது முறை தி.மு.க. ஆட்சி மலர வேண்டும்.**

**★ இனி எப்போதும் தி.மு.க.தான் தமிழ்நாட்டை ஆள வேண்டும்.**

**★ நம்முடைய தமிழினத்தைக் காக்கத் தகுதியும் திறமையும் உழைப்பும் கொண்ட ஒரே படை நம்முடைய கருப்பு சிவப்புப் படைதான்!**

**★ தமிழ்மண்ணுக்குக் காவல் அரணாக இருப்பவர்கள் நாம்தான்! தமிழ்நாடு, நம்மை நம்பித்தான் இருக்கிறது; நாமும் தமிழ்நாட்டை நம்பித்தான் இருக்கிறோம்!**

**★ தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் நாம் முன்னேற்றி இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக ஆக்கிக் காட்டி இருக்கிறோம்.**

**★ தமிழ்நாடு கேட்பதற்கெல்லாம், ‘நோ’ சொல்லும் NDAவுக்கு, தமிழ்நாடும் ‘நோ’தான் சொல்லும்!**

**★ உங்கள் டப்பா எஞ்சினுக்கு தமிழ்நாடு எப்போதுமே, ‘NoEntry’தான் சொல்லும்!**

**★ தமிழ்நாட்டின், தமிழ் மொழியின், தமிழ்ப் பண்பாட்டின், உண்மையான எதிரி பா.ஜ.க. தான்.**

**★ அ.தி.மு.க. முகமூடியைப் போட்டு பா.ஜ.க. வந்தாலும் அதைத் தடுப்போம்.**

**★ தமிழ்நாட்டை எப்படியாவது நம்மிடம் இருந்து, விழுங்கிடலாம் என்று நினைக்கிறது காவிக் கூட்டம். எங்கள் கருப்பு சிவப்புப் பட்டாளம் இருக்கிறவரை அது நடக்கவே நடக்காது.**

**★ இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினும், எங்கள் தி.மு.க.வும் இருக்கும் வரை, பா.ஜ.க.வால் தமிழ்நாட்டை ஆள முடியவே முடியாது! நீங்கள் அந்தர் பல்டி அடித்தாலும், என்ன முகமூடி போட்டுக் கொண்டு வந்தாலும், புதிது புதிதாக யாரை அழைத்துக் கொண்டு வந்தாலும், எத்தனை ஏவல் அமைப்புகளை வைத்து மிரட்டிப் பார்த்தாலும், தமிழ்நாடு எப்போதுமே உங்களுக்கு Out Of Controlதான்!**

**★ நீங்கள் இந்தியா மேப்பில் இருக்கும் எந்த மாநிலத்தின் மீது வேண்டுமானாலும், காவி அடித்திருக்கலாம்! ஆனால், தமிழ்நாட்டில் உங்கள் பாச்சா பலிக்கவே பலிக்காது!**

**★ தமிழ்நாடு அணியா? டெல்லி அணியா? என்பதைத் தீர்மானிக்கும் தேர்தல் இது. இதில் தமிழ்நாடு அணியே வெல்லும்!**

இவைதான் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் முத்தான முழக்கங்கள். ஒரே உரையில் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்கும், கோடிக்கணக்கான தமிழ்மக்களுக்கும் உணர்ச்சியையும் எழுச்சியையும் ஊட்டி விட்டார் முதலமைச்சர் அவர்கள்.

**வெல்வோம் இருநூறு; படைப்போம் வரலாறு என்பதற்கான திசைகாட்டியாக இருந்தது அவர் உரை. 2026 ஆம் ஆண்டு அடையும் வெற்றி இதுவரை பார்க்காத மாபெரும் வெற்றியாக அமையும். 200 ஐயும் தாண்டி வெல்வோம். அதற்கு ஒரே காரணம் முதலமைச்சர்தான்.**

கழகத்தை வழிநடத்தும் கம்பீரமும், ஆட்சியை வழிநடத்திய நிர்வாகத் திறனும், நாள்தோறும் உழைத்து நல்ல பல திட்டங்களை உருவாக்கித் தந்ததும், தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் உயர்த்தியதும், சர்வாதிகார ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக தோள் உயர்த்திப் போராடி வருவதும்தான் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் தனித்தன்மைகள் ஆகும். பல்வேறு திறமைகளைத் தன்னுள் தாங்கி நடைபோட்டு வருகிறார் அவர்.

**இலக்கை தலைவர் தீர்மானித்தார். அதனை வென்று காட்டும் பாதையையும் அவரே அமைத்துக் கொடுத்தார். வெல்வோம். எதிரிகள் எழ முடியாத அளவுக்கு வெல்வோம். திசை காட்டி விட்டது திருச்சி.**

---

### வளைகுடா நாடுகளில் போர் நடைபெறுவதால்

# தொழில் நிறுவனங்கள் - உணவகங்களில் கேஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டுக்குத் தீர்வு காண - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்!




**சென்னை, மார்ச் 11-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (10.3.2026) தலைமைச் செயலகத்தில், வளைகுடா நாடுகளில் போர் நடைபெற்று வருவதால் தொழில் நிறுவனங்கள், உணவகங்களில் ஏற்பட்டுள்ள கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு குறித்து அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.**

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த. உதயச்சந்திரன், பொதுத்துறை முதன்மைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் டாக்டர் கே.எஸ். பழனிசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# கோவையில் அறிவியல் மாமேதை ஜி.டி.நாயுடு திருவுருவச்சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்!

**சென்னை, மார்ச் 11-**

**கோயம்புத்தூரில் ரூ.50 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ள அறிவியல் மாமேதை ஜி.டி. நாயுடு அவர்களின் திருவுருவச் சிலையினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.3.2026) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில், கோயம்புத்தூர், அவினாசி பிரதான சாலையில் உள்ள வ.உ.சி. பூங்காவில் 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள அறிவியல் மாமேதை ஜி.டி. நாயுடு அவர்களின் திருவுருவச் சிலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.3.2026) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில், கோயம்புத்தூர், அவிநாசி பிரதான சாலையில் உள்ள வ.உ.சி. பூங்காவில் 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள அறிவியல் மாமேதை ஜி.டி. நாயுடு அவர்களின் திருவுருவச் சிலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும் அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பை பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**அறிவியல் மாமேதை ஜி.டி. நாயுடு அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தல்**

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் 202425ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், தமிழ்நாடு தந்த அறிவியல் மாமேதைகளில் ஒருவரும், இயந்திரவியல் மற்றும் விவசாயம் சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு பல்வேறு அரிய கண்டுபிடிப்புகளை உருவாக்கியவரும் கல்வியாளராகவும், எளியோருக்கு உதவும் நற்குணம் வாய்ந்தவராகவும் விளங்கிய ஜி.டி. நாயுடு அவர்களுக்கு கோயம்புத்தூரில் திருவுருவச் சிலை நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, கோயம்புத்தூர், அவினாசி பிரதான சாலையில் உள்ள வ.உ.சி. பூங்காவில் 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள அறிவியல் மாமேதை ஜி.டி. நாயுடு அவர்களின் திருவுருவச் சிலையை முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்..

கோயம்புத்தூரிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் வெற்றிச்செல்வன், மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், மாநகர காவல் ஆணையர் கண்ணன், ஜி.டி. நாயுடு அவர்களின் மகன் ஜி.டி. கோபால், அவரது மனைவி திருமதி சந்திரா, குமரகுரு கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வானவராயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### பள்ளிக் கல்வித் துறை சார்பில் ரூ.1 கோடியே 43 ஆயிரத்தில்

# மெரினா கடற்கரையில் “கற்றனைத் தூறும் அறிவு” சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மார்ச் 11-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.03.2026) பள்ளிக்கல்வித் துறை சார்பில் சென்னை மெரினா கடற்கரையில் 1 கோடியே 43 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள “கற்றனைத் தூறும் அறிவு” சிலையை திறந்து வைத்தார்.**



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பள்ளிக் கல்வித் துறை புதுமைகளை முன்னெடுத்துச் செல்லும் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை கல்வியில் திட்டமிடல், நிர்வாகம் மற்றும் கல்வி சார்ந்த கட்டமைப்புகளை தொடர்ந்து மேம்படுத்தி கல்வியில் சிறந்து விளங்கும் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகின்றது.

தமிழர்தம் வரலாற்றுத் தொன்மை, பண்பாட்டு விழுமியங்கள், வாழ்வியல் மதிப்புகளை நன்குணர்ந்து எதிர்கால சமுதாயம் ஏற்றமுறும் வகையில் இன்றைய மாணவ தலைமுறை அறிவாற்றலைப் பெறவும், வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஈடுகொடுப்பதற்கான கற்றல் அனுபவங்களைப் பெற்றிடும் வகையிலும் தரமான கல்வியை தமிழ்நாடு அரசு தொடர்ந்து அளித்து வருகிறது.

மாணவர்களின் வளர்ச்சியை முன்னுரிமையாகக் கொண்டு, பள்ளிக் கல்வித் துறை பள்ளி கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், செயற்கை நுண்ணறிவு (AI), ரோபோட்டிக்ஸ், நடுநிலைப் பள்ளிகளில் உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் (HiTec Labs), திறன் வகுப்பறைகள் (Smart Classrooms) போன்ற மேம்பட்ட தொழில் நுட்பங்களை பயன்படுத்தி வருகிறது. மேலும், மாணவர்களை மையமாகக் கொண்டு கற்றல் சூழலை உருவாக்கும் விதமாக இல்லம் தேடிக் கல்வி, வாசிப்பு இயக்கம், எண்ணும் எழுத்தும், மொழிப் பாடத்திறன் மற்றும் கணிதத்திறன் ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு “திறன்” இயக்கம் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினால் பள்ளிகளுக்கு மாணவர்கள் குறித்த நேரத்தில் வருவது அதிகரித்துள்ளதுடன், மாணவர்களிடம் கற்றல் ஆர்வம், வகுப்பறைக் கவனிப்பு, நினைவாற்றல், விளையாட்டில் முன்னேற்றம் போன்றவை ஏற்பட்டுள்ளது என மாநில திட்டக்குழுவின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு கல்வி சுற்றுலா, ஆசிரியர் திறன் மேம்பாடு, புதுமைப் பெண், தமிழ்புதல்வன், நான் முதல்வன் போன்ற திட்டங்கள், “நம்ம ஊரு நம்ம பள்ளி” மூலம் அரசுப் பள்ளிகளுக்கு தனியார், தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொழிற் நிறுவனங்கள் மூலம் உட்கட்டமைப்பு வசதிகள், கழிப்பறைகள், டிஜிட்டல் கல்வி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுகாதாரத் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. மாணவர்களுக்கு விலையில்லா பாடப்புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள், சீருடைகள், காலணிகள், கணித உபகரணப் பெட்டிகள், மிதிவண்டிகள் வழங்கி மாணவர்களின் கல்வித்திறனை மேலும் வலுப்படுத்துகின்றன.

இந்தியாவிலேயே பள்ளிக் கல்வியில் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித் துறையின் வளர்ச்சியினை வெளிப்படுத்தும் விதமாக சென்னையிலுள்ள மெரினா கடற்கரையில் சிலை அமைக்க திட்டமிடப்பட்டு, அதன்படி, 1 கோடியே 43 ஆயிரம் ரூபாய் செலவில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மூலமாக அமைக்கப்பட்டுள்ள “கற்றனைத் தூறும் அறிவு” சிலையை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, பள்ளிக்கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் பி. சந்திர மோகன், மேலாண்மை இயக்குநர் மருத்துவர் மா.ஆர்த்தி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.